காரிமங்கலம், தருமபுரி. (3) நா.பரத்குமார், புதுத் தெரு கம்பைநல்லூர், காரிமங்கலம், தருமபுரி. (4) ச.சக்திவேல், 26/83, சிவசுப்பிரமணிய கோயில் தெரு, கம்பைநல்லூர், காரிமங்கலம், தருமபுரி.

### பாப்பிரெட்டிப்பட்டி பேரூர்

**அமைப்பாளர் :** ப.கார்த்திக் அமர்நாத், மாயா பஜார் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி (அ), தருமபுரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.பிரதீப், மேல் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி (அ), தருமபுரி. (2) பொ.ஸ்டாலின், மூப்பனார் கோயில் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (3) அ.ஆஷிக் பாஷா, மஜீத் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (4) பொ.செந்தில், காமராஜ் நகர், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

### பொ.மல்லாபுரம் பேரூர்

**அமைப்பாளர் :** நா.பிரேம், 44–ஏ, மாதாகோயில் தெரு, பொ.மல்லாபுரம், பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.முத்துக்குமார், ரங்கநாதன் நகர், தருமபுரி பிரதான சாலை, பொ.மல்லாபுரம் (அ), பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (2) க.அருண், 104, அம்பேத்கர் தெரு, பில்பருத்தி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (3) சா.இலியாஸ் பாஷா, ஆர்.எம்.நகர், மஜீத் தெரு, பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (4) சு.வெங்கடாஜலபதி, 62, வினோபாஜி தெரு, பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (5) ர.மணிகண்டன், மஜீத் தெரு, பொ.மல்லாபுரம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

### கடத்தூர் பேரூர்

**அமைப்பாளர் :** ர.மதன்பாலாஜி, 4–பி–607, இந்திரா நகர், கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.தனஞ்செயன், கடைவீதி கடத்தூர் (அ), பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (2) சா.ரகமத், 138, காந்தி நகர், கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (3) நா.சபரிநாதன், அரங்கநாதன் தெரு, கடத்தூர் (அ), பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி. (4) ம.மலர்வண்ணன், 21, பெருமாள் கோயில் தெரு, கடத்தூர் (அ), பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

### பாலக்கோடு பேரூர்

**அமைப்பாளர் :** ஹ.மன்சூர் அலி, 2–199, மைதீன் நகர், பாலக்கோடு, தருமபுரி

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.அரவிந்த், 10/120, முத்து கவுண்டர் தெரு, பாலக்கோடு, தருமபுரி. (2) க.பழனிசாமி, 7–276, தீர்த்தகிரி நகர், பாலக்கோடு, தருமபுரி. (3) இரா.ஆனந்தகுமார், தீர்த்தகிரி நகர், பாலக்கோடு, தருமபுரி. (4) நா.சிவசங்கர், 11/358, புதுப்பட்டாணித் தெரு, பாலக்கோடு (அ), தருமபுரி. (5) ஹ.பஷீர் அஹமத், 2–192, மைதீன் நகர், பாலக்கோடு, தருமபுரி,

### காரிமங்கலம் பேரூர்

**அமைப்பாளர் :** மா.சுரேஷ், அம்பேத்கர் நகர், காரிமங்கலம் தருமபுரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) லி.சலாமத், தேர்பேட்டைத் தெரு, 11–வது வார்டு, காரிமங்கலம், தருமபுரி. (2) பெ.சக்திவேல், 9–5, சுப்புச்செட்டி சந்து, காரிமங்கலம், தருமபுரி. (3) ர.சந்தோஷ், 4–63, ராமசாமி கோயில் தெரு, காரிமங்கலம், தருமபுரி. (4) க.அருள், 4–83, மொரப்பூர் சாலை, காரிமங்கலம், தருமபுரி.

### மாரண்டஅள்ளி பேரூர்

**அமைப்பாளர் :** சை.சையக் வாஷீம், 42, வேங்கு கவுண்டர் தெரு, ஒட்டர் தெரு, மாரண்டஅள்ளி, பாலக்கோடு. தருமபுரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.சதீஸ், 19, அம்பேத்கர் தெரு, மாரண்டஅள்ளி, பாலக்கோடு, தருமபுரி. (2) மா.விஜய்பிரதாப், ஈ.பி. காலனி, மாரண்டஅள்ளி, தருமபுரி. (3) ச.பிரபாகரன், 45–24–ஏ, பாலசுப்பிரமணியம் தெரு, மாரண்டஅள்ளி, பாலக்கோடு, தருமபுரி. (4) கு.ஹரீஷ், 35, வண்ணார் தெரு, மாரண்டஅள்ளி, பாலக்கோடு, தருமபுரி. (5) ச.சேதுபதி, 61, மாரப்பன் தெரு, மாரண்ட அள்ளி பாலக்கோடு, தருமபுரி. (6) செ.பாலமுருகன், 18, சந்தை வீதி, மாரண்டஅள்ளி பாலக்கோடு, தருமபுரி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 12–02–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

## மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேகமாக – ரூ.1.61 கோடி மதிப்பில்

# பெசன்ட் நகர் - எலியட்ஸ் கடற்கரையில் மரப்பலகை பாதை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

### மாற்றுத்திறனாளிகளின் சக்கர நாற்காலியை தள்ளிச் சென்று – மாற்றுத்திறனாளிகளின் மகிழ்ச்சியைக் கண்டுகளித்தார்!

சென்னை,பிப்.13-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரையில் ரூ.1.61 கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட பிரத்யேக மரப்பலகைகளாலான பாதையை திறந்து வைத்து, மணலில் செல்லும் பிரத்யேக சக்கர நாற்காலியினை தள்ளிச்சென்று, மாற்றுத்திறனாளிகள் கடலில் கால்நனைத்து அடைந்த மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2025) அடையாறு மண்டலம், பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரைக்கு பொதுமக்களைப் போலவே மாற்றுத்திறனாளிகளும் சென்று கடலினைக் கண்டு மகிழ்ந்திடும் வகையில் ரூ.1.61 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட பிரத்யேக மரப் பலகைகளாலான பாதையை மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் மணலில் செல்லும் பிரத்யேக சக்கர நாற்காலியினை தள்ளிச் சென்று, மாற்றுத்திறனாளிகள் கடலில் கால்நனைத்து அடைந்த இன்பத்தை கண்டு மகிழ்ந்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரையில் பொதுமக்களைப்போலவே மாற்றுத்திறனாளிகளும் கடற்கரைக்கு சென்று கடலினைக் கண்டு மகிழ்ந்திடும் வகையில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.1.61 கோடி மதிப்பில் மரத்தாலான பாதை அமைக்கும் பணியானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.8.2024 அன்று தொடங்கி வைக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தப் பாலம் 190 மீ.நீளம், 2.80 மீ.அகலத்துடன் சிகப்பு மெரண்டி, பபூல் மற்றும் பிரேஸ்லியன் ஐ.பி.இ. மரப்பலகைகளால் அமைக்கப்பட்டது. மாற்றுத் திறானாளிகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப் பட்ட பிரத்யேக மரத்தாலான பாதையினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்தார். பிரத்யேக பாதையில் மாற்றுத்திறனாளிகளுடன் உடன் சென்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான மணலில் செல்லும் பிரத்யோக சக்கர நாற்காலியினை தள்ளிச்சென்று, மாற்றுத்திறனாளிகள் கடலில் கால்நனைத்து அடைந்த இன்பத்தை கண்டு மகிழ்ந்தார்.

ஏற்கனவே, மெரினா கடற்கரையில், மாற்றுத்திறனாளிகள் கடலினைக் கண்டு மகிழ்ந்திடும் வகையில், ரூ.1.14 கோடி மதிப்பில் மரத்தாலான கடலினை அணுகும் பாதையானது கடந்த 27.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மாமன்ற உறுப்பினர் திருமதி ம.ராதிகா, மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2025) பெசன்ட் நகர் கடற்கரையில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.1.61 கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகள் கடலினைக் கண்டு மகிழ்ந்திடும் வகையில் அமைக்கப்பட்ட பிரத்யேக மரப்பலகைகளாலான பாதையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என். நேரு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ், துணை ஆணையாளர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2025) பெசன்ட் நகர் கடற்கரையில் ரூ.1.61 கோடி மதிப்பில் பிரத்யேக மரப்பலகைகளாலான பாதையை திறந்து வைத்து, மாற்றுத்திறனாளி களுக்கான மணலில் செல்லும் பிரத்யேக சக்கர நாற்காலியினை தள்ளிச்சென்று, மாற்றுத்திறனாளிகள் கடலில் கால்நனைத்து அடைந்த இன்பத்தை கண்டு மகிழ்ந்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என். நேரு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ், துணை ஆணையாளர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

---

## கடந்த மூன்று ஆண்டுகளாக

# தமிழ்நாட்டு கல்வி வளர்ச்சிக்கான நிதியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி ஆதாரத்தோடு குற்றச்சாட்டு!

சென்னை, பிப். 13 -

**தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி சார்ந்த பல்வேறு திட்டக்கூறுகளை நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்ட 2023- 24ஆம் ஆண்டிற்கான நான்காம் தவணை நிதி ரூபாய் 249 கோடியும், 2024 -25 ஆம் ஆண்டிற்கான நிதி ரூபாய் 2,152 கோடியும் ஒன்றிய அரசு விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருவதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.**



ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டமானது 2018 ஆம் ஆண்டிலிருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தினை செயல்படுத்து வதற்காகத் திட்ட ஏற்பளிப்பு குழுவால் ஒப்பளிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியானது, ஒன்றிய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40சதவீதமும் என்ற பகிர்வு முறையில் விடுவிப்பு செய்யப்படுகிறது. அதன்படி, 2024 -25ஆம் நிதியாண்டில் திட்ட ஏற்பளிப்பு குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிய அரசின் 60% பங்கான ரூ.2,152 கோடி நிதியினை தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்கவில்லை.

2023 - 24 ஆம் ஆண்டுக்குத் தமிழ்நாட்டிற்கென ரூ.3,533 கோடி திட்ட ஏற்பளிப்பு குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்நிதியில் இரண்டு தவணைகள் மட்டுமே விடுவிக்கப்பட்ட நிலையில், மூன்றாம் தவணை விடுவிப்பதற்கு முன்பாக ஒன்றிய அரசு PM SHRI பள்ளிகளை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டால் மட்டுமே ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் நிதியினை விடுவிக்க முடியும் என வலியுறுத்தியது.

PM SHRI பள்ளிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது சார்ந்து பள்ளிக் கல்வித்துறை செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும், அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் 23.02.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

PM SHRI பள்ளிகள் சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து பள்ளிக் கல்வித்துறை செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது, தனது அறிக்கையில் PM SHRI பள்ளிகள் உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முதல் நிபந்தனையாக மும்மொழி கொள்கையினை பின்பற்றுவதை வலியுறுத்திஉள்ளது. இந்த நிபந்தனையானது தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் கல்வி முறைக்கு முரணாக உள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, PM SHRI பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்து வதையும், ஏற்கனவே தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வரும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் திட்டக்கூறுகளைச் செயல்படுத்துவதையும் ஒன்றாகக் கருதாமல், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் திட்ட நிதியினை விடுவிக்குமாறு ஒன்றிய கல்வி அமைச்சகத்திடம் தொடர்ந்து வலியுறுத்தப் பட்டு வருகின்றது.

இருப்பினும், 2024 - 25ஆம் நிதியாண்டில் திட்ட ஏற்பளிப்பு குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிய அரசின் 60% பங்கான ரூ.2,152 கோடி நிதியினை தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்கவில்லை. மேலும், ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைத் தவிர்த்துப் பிற மாநிலங்களுக்கும் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் ரூ. 17,632.41 கோடி நிதியினை ஒன்றிய அரசு விடுத்துள்ளது.

எனவே, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி சார்ந்த பல்வேறு திட்டக்கூறுகளை நிறைவேற்று வதற்காக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2023-24 ஆம் ஆண்டிற்கான நான்காம் தவணை நிதி ரூபாய் 249 கோடியும், 2024-25ஆம் ஆண்டிற்கான நிதி ரூபாய் 2,152 கோடியும்ஒன்றிய அரசு விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.